பொதுத்தமிழ்-பகுதி-அ-இலக்கணம்

அலகு - 9

## ஓரெழுத்து ஒருமொழி உரிய பொருளைக் கண்டறிதல்

ஈ, பூ, கை ஆகிய எழுத்துகளைக் கவனியுங்கள்.

இவை ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இவ்வாறு ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.

நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் நொ, து ஆகிய இரண்டு சொற்களைத்தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

### ஓரெழுத்து ஒரு மொழிகளும் அவற்றின் பொருளும்

| | |
|---|---|
| 1. ஆ- பசு | 22. நே- அன்பு |
| 2. ஈ- கொடு | 23. நை- இழிவு |
| 3. ஊ- இறைச்சி | 24. நோ- வறுமை |
| 4. ஏ- அம்பு | 25. பா- பாடல் |
| 5. ஐ- தலைவன் | 26. பூ- மலர் |
| 6. ஒ மதகுநீர் தாங்கும் பலகை | 27. பே - மேகம் |
| 7. கா- சோலை | 28. பை- இளமை |
| 8. கூ- பூமி | 29. போ- செல் |

| | |
|---|---|
| 9. கை- ஒழுக்கம் | 30. மா- மாமரம் |
| 10. கோ-அரசன் | 31. மீ- வான் |
| 11. சா- இறந்துபோ | 32. மூ மூப்பு |
| 12. சீ- இகழ்ச்சி | 33. மே- அன்பு |
| 13. சே- உயர்வு | 34. மை- அஞ்சனம் |
| 14. சோ- மதில் | 35. மோ- மோத்தல் |
| 15. தா- கொடு | 36. யா- அகலம் |
| 16. தீ- நெருப்பு | 37. வா- ழைத்தல் |
| 17. தூ- தூய்மை | 38. 38.வீ- மலர் |
| 18. தே- கடவுள் | 39. வை- புல் |
| 19. தை- தைத்தல் | 40. வெள- கவர் |
| 20. நா- நாவு | 41. நொ- நோய் |
| 21. நீ- முன்னிலை ஒருமை | 42. து- உண். |